செ.வெ.எண்: 18 நாள்: 06.02.2017

**புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 3.91 இலட்சம் மாணவ, மாணவியர்கள் மற்றும் குழந்தைகளுக்கு தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி போடப்படவுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மாவட்ட பொது சுகாதாரத்துறையின் கீழ் மாணவ, மாணவியர்களுக்கு தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி போடும் நிகழ்ச்சியானது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (06.02.2017) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாணவ, மாணவியர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படுவதை பார்வையிட்டு தெரிவித்ததாவது:

உலக சுகாதார நிறுவனம் (WHO) மற்றும் தேசிய தடுப்பூசிக்கான வல்லுனர் குழுவின் அறிவுறுத்தலின்படி இந்திய அரசு மற்றும் தமிழகஅரசு மீசில்ஸ்-ரூபெல்லா தடுப்பூசி போட திட்டமிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் பிப்ரவரி 6-ந் தேதி முதல் 28-ந் தேதி வரை மீசில்ஸ்-ரூபெல்லா தடுப்பூசி வழங்கும் முகாம் நடத்தப்பட உள்ளது. இம்முகாமில் நமது மாவட்டத்திலுள்ள 9 மாதம் முடிவடைந்த குழந்தைகள் முதல் 15 வயதுடைய சிறார்கள் வரை மொத்தம் 3,91,562 குழந்தைகளுக்கு இந்த தடுப்பூசி வழங்கப்பட உள்ளது. பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு இந்த தடுப்பூசி வழங்கப்பட உள்ளது. பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு பள்ளிகளிலும், பள்ளி செல்லாக் குழந்தைகளுக்கு அங்கன்வாடி மையங்களிலும் தடுப்பூசி வழங்கப்பட உள்ளது. 1990-ம் ஆண்டுகளிலிருந்து MMR எனும் தடுப்பூசி தட்டம்மை பொண்ணுக்குவீங்கி ரூபெல்லா நோய்களுக்கு தனியார் துறைகளில் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வளவு காலமாக பயன்படுத்தப்பட்டு வரும் அத்தடுப்பூசியினால் இதுவரை எந்த பாதிப்புகளும் ஏற்பட்டதாக தகவல் இல்லை. தற்போது தட்டம்மை, ரூபெல்லா ஆகிய இரு நோய்களுக்கான தடுப்பூசி தமிழக அரசின் மூலம் இலவசமாக வழங்கப்பட உள்ளது.

இந்த ரூபெல்லாவிற்கு எதிரான தடுப்பூசி இதுவரை தனியார் மருத்துவமனைகளில் மட்டுமே போடப்பட்டு வந்தது. அதைத்தான் தற்போது இலவசமாக அரசு மீசில்ஸ்-ரூபெல்லா (Measles Rubella Vaccine) என்று மாற்றியுள்ளது. மீசில்ஸ்-ரூபெல்லா (Measles Rubella Vaccine) ஏற்கனவே தனியார் மருத்துவமனைகளில் போடப்பட்டு வரும் ஊசிதான். இதுவரை பணம் படைத்தவர்கள் மட்டும் இந்த ஊசியை போட்டு வந்தனர். தற்போது இந்தியா முழுவதும் இந்த தடுப்பூசி இலவசமாக போடப்பட்டு இருக்கிறது. மேலும் இந்த மீசில்ஸ்-ரூபெல்லா (Measles Rubella) தேசிய தடுப்பூசி திட்டதிலும் சேர்க்கப்பட இருக்கிறது. 9 மாதங்கள் நிறைவுற்ற குழந்தைகளும் ஒன்றரை வயது குழந்தைகளுக்கும் இந்த மீசில்ஸ்-ரூபெல்லா (Measles Rubella) தடுப்பூசி தான் இனி போடப்பட உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 1,545 அரசுப் பள்ளிகளில் பயிலும் 1,55,870 மாணவர்களுக்கும், 111 அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 28,671 மாணவர்களுக்கும், 267 தனியார் பள்ளிகளில் பயிலும் 92,479 மாணவர்களுக்கும் தடுப்பூசி வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 1,573 பள்ளிகளும், 1,272 அங்கன்வாடி மையங்களும், 20 நடமாடும் மருத்துவக்குழுக்களும் தடுப்பூசி வழங்கிடும் மையங்களாகச் செயல்பட உள்ளன.

இதனை பயன்படுத்தி புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து பொது மக்களும், தாய்மார்களும் இந்திய அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட மீசில்ஸ் ரூபெல்லா தடுப்பூசியினை போட்டு இந்நோயினால் வரக்கூடிய பாதிப்புகளிலிருந்து தங்கள் குழந்தைகளை பாதுகாக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். குழந்தைகளை நோய்களிலிருந்து பாதுகாப்பது பெற்றோர்களின் கடமையாகும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சுகாதாரத்துறை துணை இயக்குநர் மரு.பரணீதரன், இணை இயக்குநர் மரு.சம்சத்பேகம், நகராட்சி ஆணையர் (பொ) திரு.ஜீவாசுப்ரமணியன், கண்காணிப்பு மருத்துவ அலுவலர் மரு.ஜெயசீலன், நகர்நல அலுவலர் மரு.விஜயக்குமார், மண்டல பொது சுகாதார பயிற்சி நிலைய முதல்வர் மரு.ஜெயசீலன், பள்ளித்தலைமையாசிரியர் திருமதி.அருமைக்கண்ணு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**